பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 05 வெள்ளிக்கிழமை 22.10.2021 கதிர் 351

## இது ரகசியம் அல்ல!

இரத்தம் தண்ணீரை விடக் கெட்டியானது (Blood is thicker than water) என்று ஓர் இடைக் கால முதுமொழி ஆங்கிலத்தில் உண்டு.

அதுவும் சகோதர இரத்தம் இன்னும், கெட்டியானது. நட்பு, காதல் என்பவற்றின் ☞2

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் 3 மாதங்களில் மட்டும் 39 பேர் கைது



### நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 39 பேர் இரவிரவாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இறுதிக்கட்டப் போர் நடந்த கடந்த 2009ஆம் ஆண்டு பல சிறுவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். குறிப்பாக 18.05.2009 ஆம் ஆண்டில் முன்னாள் போராளிகளின் பிள்ளைகள் இவ்வாறு இராணுவத்திடம் தாய், தந்தையுடன் ஒப்படைக்கப்பட்டனர். ☞10

## தொற்று 554 மரணம் 19

இலங்கையில் நேற்று 554 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 33 ஆயிரத்து 860 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 ஆயிரத்து 790 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் ☞10

# இந்திய மீனவரின் சடலத்தை அங்கு அனுப்புவதில் நெருக்கடி


## இலங்கைக் கடற்படையினரால் கைதான இரு மீனவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழக மீனவர்கள் நிபந்தனை

(ந.லோகதயாளன்)

யாழ்., காரைநகர் கடற்பரப்பில் உயிரிழந்த இந்திய மீனவரின் உடலை தமிழகம் அனுப்புவதில் இந்திய - இலங்கைத் தரப்புக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றார்.

காரைநகர் - கோவளம் பகுதிக்குள் கடந்த 18ஆம் திகதி ஊடுருவிய இந்திய மீனவரின் படகை மடக்கிப் பிடிக்க முற்பட்ட இலங்கை கடற்படையினரின் படகு ஒன்று மோதியதில் இந்திய மீனவரின் படகு முழுமையாக கடலில் மூழ்கியது. இதன்போது இரு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டபோதும் ஒருவர் காணாமல் போயிருந்தார். இவ்வாறு காணாமல்போன இந்திய மீனவரைத் தேடி கடற்படையினர் 18ஆம் திகதி இரவு மற்றும், 19ஆம் திகதிகளில் தேடுதலில் ஈடுபட்டனர். ☞10

## ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்காதீர்!



### — சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

(இ.கலையமுதன்)

தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்த சட்டமூலம் நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதுடன் ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்குவதாக அமையும்.

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து ☞10

## எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் அதிகரிப்பு

### லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவிப்பு

எரிபொருள் விலையை நேற்று நள்ளிரவு முதல் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அதிகரித்துள்ளது.

அதற்கமைய 92 ஒக்ரைன் பெற்றோல் ஒரு லீற்றர் 5 ☞10




## காரைநகர் தவிசாளர் காலமானார்



(ந.லோகதயாளன்)

யாழ்., காரைநகர் பிரதேச சபை தவிசாளர் விஜயதர்மா ☞10

# தவறாகக் கைதுசெய்யப்பட்டால் உடனடியாகத் தெரியப்படுத்துக!

### நீதி அமைச்சர் அலி சப்ரி அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு நபர் தவறாகக் கைது செய்யப்பட்டால் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருந்தால், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிடம் உடனே கோரிக்கை வைக்கலாம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதுபோன்ற 46 கோரிக்கைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன எனவும் அவர் நேற்று நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மறு ஆய்வு மீண்டும் தொடங்கியுள்ளது எனவும் நீதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



## யாழ்.போதனா படுகொலை நினைவேந்தல்



(எஸ்.நிதர்ஷன்)

இந்திய இராணுவத்தினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் படுகொலை ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிடிமானத்தை விட இரத்த உறவு என்ற பிடிமானம் வலிமையானது என்பதைச் சொல்லத்தான் இந்த முதுமொழி.

அதை ராஜபக்ஷ இராச்சியத்தில் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இரத்தம் தண்ணீரை விடக் கெட்டியானது என்பதை நிரூபிக்கும் ஒரு நிகழ்வு சத்தம் சந்தடியின்றி கொழும்பில் முன்நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இலங்கையில் மூன்று தமிழ் சினிமாப் படங்களை எடுத்து அவற்றில் முக்கிய பாத்திரமேற்று நடித்து அழியாப் புகழ் பெற்றவர் வி.பி.கணேசன். 'புதிய காற்று', 'நான் உங்கள் தோழன்', 'நாடு போற்ற வாழ்க' என்பன அவர் நடித்த நட்சத்திரப் படங்கள். அவர் நடிகர் மட்டுமல்லர், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் – தொழிற் சங்கத்தின் – தலைவராகவும் இருந்த ஓர் அரசியல் தலைவர். அவரின் இரண்டு பிள்ளைகள் இலங்கையின் அமைச்சர்களாக இருந்தவர்கள்.

ஒருவர் – மனோ கணேசன்; மற்றவர் – பிரபா கணேசன்.

இருவருமே ஆரம்பத்தில் ஒரே கட்சியில் தான் அரசியலில் ஈடுபட்டனர். தந்தையின் வழியில் அண்ணனின் ஜனநாயக மக்கள் முன்னணியில்தான் தம்பி பிரபா கணேசனும் பயணித்தார்.

2001, 2004ஆம் ஆண்டுத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொழும்பில் போட்டியிட்டு வென்று எம்.பியான மனோ கணேசன், 2010 நாடாளுமன்றத் தேர்தலில் தனது கொழும்பு மாவட்ட இடத்தை தம்பி பிரபா கணேசனுக்கு உறுதியாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்போடு பெருமனது பண்ணி விட்டுக் கொடுத்து விட்டு, கண்டி மாவட்டத்தில் போய் நிற்கும் 'றிஸ்க்' ஆன முடிவை எடுத்தார். தான் கண்டியில் போட்டியிட்டுத் தோற்றாலும் கூட, தனது தரப்பு கொழும்பிலும், கண்டியிலும் பிற தென் பகுதி இடங்களிலும் ஐ.தே.கட்சிக்குத் தாராளமாக வாக்குகளைத் திரட்டிக் கொடுப்பதனால், அதன் காரணமாக தமது கட்சிக்கு ஐ.தே.கட்சி ஒதுக்கும் தேசியப் பட்டியல் நியமனம் மூலம் தாம் எம்.பியாக முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது.

எதிர்பார்த்தபடியே, கண்டி மாவட்டத்தில் அவரால் வெற்றி பெறமுடியாமல் போயிற்று. ஆனால் எதிர்பாராத விதமாக மனோ கணேசனின் கட்சிக்கு தேசியப் பட்டியல் இடத்தை வழங்காமல் காலை வாரினார் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அதனால் 2010இல் எம்.பி. பதவியை இழந்து நிர்கதியானார் மனோ கணேசன். எனினும் தாம் உருவாக்கி வளர்த்த தம்பியார் தன் சார்பில் கொழும்பில் மாவட்டத்தில் எம்.பியாக இருக்கின்றார் என்று திருப்திப்பட்டுக் கொண்டார் மனோ. ஆனால் அந்த நம்பிக்கையும் திடீரென தகர்ந்தது.

அந்த நேரத்து இருண்ட யுக ஆட்சியின் நெருக்கடிகளுக்கு மத்தியில் பாதுகாப்புக் கருதி நாட்டுக்கு வெளியே மனோ ஒதுங்கியிருக்க வேண்டிய நிலையில், யாரின் நெருக்குவாரத்தினால், மனோ வெளியில் முடங்கிக் கிடந்தாரோ, அவரின் பக்கமே போய்ச் சேர்ந்தார் தம்பி பிரபா கணேசன் எம்.பி. அது மாத்திரம் அல்ல, பின்னர் ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தில் ஓர் அமைச்சராகவும் இணைந்து கொண்டார்.

தாமும் தமது கட்சியும் ராஜபக்ஷ அரசின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் கண்டித்து நிற்க, தமது கட்சியின் சார்பில் எம்.பியான தம்பி பிரபா

☞10




# துயர்பகிர்வோம்



## இளவாலை கலாபூஷணம் சைவப்புலவர்

# சு.செல்லத்துரை

### (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்)

இளவாலை கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் 21.10.2021 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் மாவிட்டபுரம் சின்னத்தம்பி சுப்பிரமணியம், இளவாலை சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், இணுவில் – இளவாலை காலஞ்சென்ற சிவகாமசுந்தரி அவர்களின் பேரன்புமிக்க கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா உலகநாதன் (வயாவிளான்), செல்வநாயகி சண்முகலிங்கம் (இணுவில்), செல்வமணி இராசேந்திரம் (இளவாலை) ஆகியோரின் சகோதரரும், நாவரசன் (லண்டன்), மாவிரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேகா (இலண்டன்), பிரகாஜினி ஆகியோரின் அன்பு மாமாவும், நிலான் (இலண்டன்), சுகான் (இலண்டன்), அட்சயா, சிவகர்சா, அபிலோசன் ஆகியோரின் பேரன்புமிக்க அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக அவரது இளவாலை இல்லத்தில் இன்று (22.10.2021) காலை 10 மணியளவில் பார்வைக்காக வைக்கப்பட்டு, 11.00 மணியளவில் அன்னார் இறுதிக்காலத்தில் வாழ்ந்த ஏழாலை இல்லத்தில் இறுதிக்கிரியைகள் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகள் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**

**மைந்தர்கள் நாவரசன் (இலண்டன்) - 00447985269135**

**மாவிரதன் - 0094773867070**

Jaffna College Institute of Technology
Calls for the following courses

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13 நாவலர் வீதி வரிமதிப்பீட்டு இலக்கம் 406 என்னும் இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பொன்னம்பலம் பெண் கனகாம்பிகை என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தில் சொரியலான 1/4 பங்கை பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் 26.04.1993ம் ஆண்டு 1231ம் இலக்க அறுதி உறுதி மூலம் முத்துக்குமாரசாமி கைம்பெண் மனோன்மணி என்பவர் கந்தையா ஆனந்தநடேசனுக்கும் பெண் விஜயமாலினிக்கும் அறுதியாக விற்பதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தில் சொரியலான 1/8 பங்கை பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் 26.04.1993ம் ஆண்டு 1232ம் இலக்க அறுதி உறுதி மூலம் இளையதம்பி சண்முகம் சிவபாலன் என்பவர் கந்தையா ஆனந்தநடேசனுக்கும் பெண் விஜயமாலினிக்கும் அறுதியாக விற்றதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தில் சொரியலான 1/36 பங்கை பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் 09.05.1993ம் ஆண்டு 1241ம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தப்பா வைரமுத்து கைம்பெண் நாகேஸ்வரி என்பவர் கந்தையா ஆனந்த நடேசனுக்கும் பெண் விஜயமாலினிக்கும் அறுதியாக விற்பதாக கூறப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தில் சொரியலாக 2/36 பங்கை அதே நொத்தாரிசு முகதாவில் 16.06.1997ம் ஆண்டு 1633ம் இலக்க அறுதி உறுதி மூலம் சிவப்பிரகாசம் சிவராசாவும் மறுபேரும் ஆனந்தநடேசனுக்கும் விஜயமாலினிக்கும் அறுதியாக விற்பதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த முழு ஆதனத்தையும் பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 03.10.2017 ம் ஆண்டு 5917ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் குறித்த கந்தையா ஆனந்தநடேசனும் பெண் விஜயமாலினியும் ஆனந்த நடேசன் லக்ஷன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

ஆதனடாப்பு:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை உள்ளூராட்சி சபை யாழ்ப்பாணம் மாநகரசபை, பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம், கிராம சேவையாளர் பிரிவு J/78, “வீரபத்திரன் வளவு” நிலப்பரப்பு (நில.பர 03) வீடும் கிணறும் செய்பயிர்களும் இந்தப்பரப்பு மூன்றுக்கும் முன்னுறுதிப்படி எல்லைகள்.

கிழக்கு:- இராமலிங்கம் பெண் பாக்கியத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள்.

வடக்கு:- வீதி.

மேற்கு:- விசுவலிங்கம் பெண் செல்லத்துக்குரிய ஆதனம்.

தெற்கு:- கிணற்றுக்கு போக்குவரத்து செய்யும் கையொழுங்கை இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும்.

தற்போது ஆனந்த நடேசன் லக்ஷன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஆனந்த நடேசன் லக்ஷன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர் மாநகரசபை**

# யாழ் மாநகர சபையால் உருவாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரிப்பு

## மாநகர சபை ஆணையாளர் பெருமிதம்



யாழ்ப்பாண மாநகர சபை மீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபை சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சேதனப் பசளை உற்பத்தி என்பது யாழ்ப்பாண மாநகர சபையின் மீள் சுழற்சி தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மிகவும் அண்மைக்காலமாக சேதனப் பசளைக்கு கேள்வி அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்தியை நாம் அதிகரித்துள்ளோம்.

அண்மைய காலங்களில் மாதத்துக்கு 25 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் கிலோ சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. 'வீரியம்' என்ற பெயரில் யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான மீள் சுழற்சி மையத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு ஒரு கிலோ 20 ரூபா விலையில் விற்கப்படுகிறது.

தற்போது பெருந்தொகையானோர் எமது சேதனப் பசளையை விவசாயிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் ஆர்வத்துடன் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் மாநகரசபை மீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளையை மீள் சுழற்சி மையத்திலும் மற்றும் ஏனைய திரட்டு அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும். – என்றார்.

# ஆப்கானின் தற்போதைய நிலவரங்கள் இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம்



ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைவரங்கள் இலங்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக ஆப்கானிஸ்தானின் நிலைவரங்கள் இந்து சமுத்திரப்பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பில் தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்று அஷ்ரப் ஹைதாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி ஆப்கானிஸ்தானில் போதைப்பொருள்கள் உற்பத்திசெய்யப்படுவதுடன் அவை பிராந்திய ரீதியில் இயங்கும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுக்களால் ஏனைய நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன.

இந்துப் பிராந்தியத்திலுள்ள ஏனைய அரசாங்கங்களை வலுவிழக்கச்செய்யும் வகையிலான தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு நிதியளிக்கும் நோக்கிலேயே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே இவற்றால் இலங்கை உள்ளிட்ட கடலால் சூழப்பட்ட நாடுகளுக்கு நெருக்கடிகள் ஏற்படக்கூடும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸுடனான சந்திப்பின் போதே ஆப்கானிஸ்தான் தூதுவர் இந்த விடயங்கள் தொடர்பில் எடுத்துரைத்துள்ளார்.

அதேவேளை இஸ்லாமியக் குடியரசைப் புறக்கணிக்கின்ற, தோல்வியடைந்த 'டோஹா ஒப்பந்தம்' தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட அஷ்ரப் ஹைதாரி, அந்த ஒப்பந்தத்தின் தோல்வி உலகளாவிய ரீதியிலுள்ள தீவிரவாதக் குழுக்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கையில் இடம்பெற்றுவந்த நீண்டகாலப்போர் கடந்த 2009 ஆம் ஆண்டில் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டமை தொடர்பாக அவர் தனது பாராட்டையும் பகிர்ந்துள்ளார்.

மேலும் போரிலிருந்து சமாதானத்துக்கு நிலைமாற்றமடைவது தொடர்பாகத் தெற்காசியாவின் மிகப்பழைமையான ஜனநாயக நாடான இலங்கையிடமிருந்து ஆப்கானிஸ்தான் பல்வேறு விடயங்களையும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது என்றும் அஷ்ரப் ஹைதாரி மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# 92 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்களுக்கு வீடுகளில் சிகிச்சை இதுவரை வழங்கப்பட்டது!

## விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி தெரிவிப்பு

வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் முறைமையின் கீழ் இதுவரையில் 92 ஆயிரத்து 128 கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 4 மாதங்களாக அறிகுறிகள் அற்ற தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கும் முறைமை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கமைய இதுவரையில் 92 ஆயிரத்து 128 கொவிட் தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதோடு அவர்கள் அனைவரும் முற்றாகக் குணமடைந்துள்ளனர். தற்போது 3 ஆயிரத்து 168 பேருக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்படுகிறது.

இது வரையில் வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்பட்ட மொத்த தொற்றாளர் எண்ணிக்கையில் 30 சதவீதமாகும். தற்போது நாடளாவிய ரீதியில் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமைக்கு இணையாக வீடுகளில் சிகிச்சை பெறும் தொற்றாளர் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

இவ்வாறு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்பட்டு வந்தவர்களில் 1,469 பேர் மாத்திரமே வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது நூற்றுக்கு 1.4 சதவீதம் மாத்திரமேயாகும். சகலரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்த நிலைமையை மேலும் கட்டுப்படுத்த முடியும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொலிஸ் துறைக்கு வெட்கம்!

"நீதி நிலை நாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்" – என்பார்கள். இது நீதித்துறையில் மிக முக்கியமான ஒரு வழிகாட்டல் நடைமுறையாகும்.

இலங்கையின் நீதித்துறை மீது இலங்கைத் தமிழர்கள் அவநம்பிக்கை கொண்டிருக்கும் வேளையில், நீதியை நிலைநாட்டுவோம் என்ற நம்பிக்கையைத் தரும் விதத்தில் ஒரு பிரதிபலிப்பைக் காட்டியிருக்கின்றது இலங்கை உயர் நீதிமன்றம். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

அநுராதபுரம் சிறைக்குள் அப்போது சிறைத்துறைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை புகுந்து பண்ணியவை எனக் கூறப்படும் அட்டகாசங்கள் மிக மோசமானவை.

போதையில் சிறைக்குள் புகுந்தமையும், தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து அரைவட்ட வழவில் தமக்கு முன்னாள் முழந்தாளிடப் பணித்தமையும், ஒவ்வொருவரையும் அச்சுறுத்தும் விதத்தில் நடந்து கொண்டமையும், கைதிகள் இருவரின் தலையில் தமது கையிலிருந்த பிஸ்டலை வைத்து அச்சுறுத்தியமையும், இவ்வளவுக்கும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் பக்கத்தில் இருந்து ஒத்துழைத்தமையும் மிக மிக மோசமான குற்றவியல் சம்பவங்கள்.

இது தொடர்பில் உரிய முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் பொலிஸார் சரியான நடவடிக்கை எதனையும் எடுக்கவேயில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருகின்றது பொலிஸ் துறை. அந்த அமைச்சுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரா இது விடயத்தில் என்ன பீற்றிக் கொண்டாலும் அவருக்குக் கீழ் இருக்கும் பொலிஸ் துறை இவ்விடயத்தில் கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்கும் விதத்தில்தான் இதுவரைச் செயற்பட்டிருக்கின்றது என்பது துலாம்பரமான உண்மை.

இந்தச் சம்பவம் நடந்து ஒன்றரை மாதங்களாகி விட்டன. இன்னும் கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியிருக்கும் லொஹான் ரத்வத்தையிடம் பொலிஸார் ஒரு வாக்குமூலத்தைத் தன்னும் பதியவில்லை. அவர் அரசியல் கைதிகளின் தலையில் வைத்து அழுத்திய கைத்துப்பாக்கி யாருடையது, அதை வைத்திருப்பதற்கு லொஹான் ரத்வத்தைக்கு அனுமதி உண்டா, 'லைசன்ஸ்' அனுமதி பெற்ற கைத்துப்பாக்கித்தான் அவர் அன்று தம்முடன் எடுத்துச் சென்றாரா, சட்ட விரோதத் துப்பாக்கியை அவர் கையாண்டாரா என்ற கேள்விகள் கூடத் தொக்கி நிற்கின்றன.

பொலிஸார் நெருங்க முடியாத அதிகார உச்சத்தில் இருக்கின்றார் போலும் லொஹான் ரத்வத்தை. அதனால்தான் சரத் வீரசேகராவும், அவரது பொலிஸ் துறையும் செயலற்று இருக்கும் நிலைமை நீடிக்கின்றது.

ஆக, இந்தச் சம்பவம் குறித்து ஆராய நீதி அமைச்சர் அலி சப்றி நியமித்த, ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்த்தனா மட்டுமே கடந்த செவ்வாயன்று அமைச்சர் லொஹான் ரத்வத்தையைச் சந்தித்து அவரின் வாக்குமூலத்தைப் பெற்றிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் இன்னும் ஒரு கேள்வி கூட லொஹான் ரத்வத்தையிடம் கேட்கவில்லை. அதனால்தான் போலும், இவ்விவகாரத்தில் உடனடியாக குற்ற விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்து, சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விரிவான அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் நேற்று பகிரங்க உத்தரவு விடுத்திருக்கின்றது.

இத்தகைய உணர்வுபூர்வமான வழக்கில் இவ்வளவு காலமும் செயலற்றுச் செத்துக் கிடக்கும் பொலிஸ் துறையை உயர்நீதிமன்றமே தட்டி எழுப்பி, கடமையை நினைவுபடுத்தி, உத்தரவு பிறப்பித்து, வழிகாட்டி, வற்புறுத்தும் நிலைமை ஏற்பட்டிருப்பது உண்மையில் பொலிஸ் துறைக்கே வெட்கம்தான்...!

# பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள சிறப்புப் படையணி



பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அல்லது வேறு எந்தவொரு தேசிய அவசர நிலைகளையும் எதிர்கொள்ளும் செயற்பாடுகளுக்குப் பலம் சேர்க்கும் வகையில் உயர்தர இராணுவப் படையணியாக புதிய படையணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் சிறப்பு நடவடிக்கை படைப்பிரிவு, விசேட அதிரடிப் படையணி மற்றும் ஏனைய படையணிகள் ஆகியவற்றை இணைத்து 'முதலாவது இலங்கை இராணுவ படையணி' உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வு சாலியபுர கஜபா படையணித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இராணுவத் தளபதியின் முன்னோக்கு வழி மூலோபாய 2020 – 2025 திட்டக் கொள்கையின் ஓர் அங்கமாகவே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் அழைப்பின் பேரில், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வு) ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமையுடன் அவருக்கு இராணுவ சம்பிரதாய முறையின் பிரகாரம் இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

'வேகம், சக்தி, தைரியம்' என்ற நோக்கக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மேற்படி படையணியின் சின்னத்தை இலங்கை இராணுவத்தின் முதலாவது படையணி படையினருக்கு பாதுகாப்பு செயலாளர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் இராணுவ நிறைவேற்றுப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்க ஆகியோருடன் இணைந்து அணிவித்தார்.

இதன் போது முதலாவது இலங்கை இராணுவப் படையணியின் தளபதியான மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்கவுக்கான படையணி சின்னத்தை பாதுகாப்பு செயலாளர் அணிவித்து வைத்தமையுடன் அந்தப் படையணியின் கொடியையும் வழங்கினார். கிளிநொச்சியில் உள்ள தலைமையகத்தில் இருந்து செயற்படும் இலங்கை இராணுவ முதலாவது படையணியின் அதிகாரபூர்வ வலையமைப்பையும் பாதுகாப்பு செயலாளர் ஆரம்பித்து வைத்தார்.

இந்த புதிய படையணியானது 53 வது படைப்பிரிவு , 58 வதுபடைப்பிரிவு, கொமாண்டோ படையணி, சிறப்புப் படையணி பிரிகேட், எயார் மொமைல் பிரிகேட், காலாட்படை பிரிகேட் மற்றும் கிளிநொச்சியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஏனைய படையணிகளை உள்ளடக்கி உறுவாக்கப்பட்டுள்ளதோடு, எதிர்பாராத சூழ்நிலைகளை நிவர்த்தி செய்ய அல்லது திடீர் குழப்பங்களுக்கு பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் முக்கிய இராணுவப் படையில் இருந்து அழைப்பின் பேரில் செயற்பட உதவியாக அமையக்கூடிய வகையில் சிறந்த படையணியாகச் செயற்படும்.

கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தின் சிறப்பு நடவடிக்கை படைப்பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப் படையணி ஆகிய படையணிகள் தன்னிச்சையாக செயற்பட்டு வந்தாலும் மேற்குறித்த படையணிகள் இந்தப்படையணியுடன் இணைத்து சமகால பாதுகாப்பு இயக்கவியல், இயற்கை பேரழிவுகள், மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள், தொற்றுநோய்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அல்லது வேறு எந்த தேசிய அவசர நிலைகளையும் எதிர்கொள்ளும் செயற்பாடுகளுக்கு ஒரு சக்தியாக உயர்தர இராணுவப் படையணியாக உருவாக்கப்பட்டது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

இராணுவத் தளபதியின் தொலைநோக்கு 'முன்னோக்கு வழி மூலோபாயம் 2020 – 2025' என்பது போர் ஒத்துழைப்பு மற்றும் போர் சேவை ஒத்துழைப்பு படையினருடன் ஒருங்கிணைந்த மற்றும் தேவையான கூட்டு நடவடிக்கைகளுடன் பொருத்தமான குழுவாக இருக்கும் முகமாக தேசம் மற்றும் படையினரின் பாதுகாப்பிற்கான சக்தியாக பல்வகைப்பட்ட தற்செயல் பணிகளை மேற்கொள்ளத் தயார் நிலையில் இந்த சிறப்பு நடவடிக்கை படைப்பிரிவினரை வைத்திருக்கும்.

# இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் வெளிநாட்டலுவல் அமைச்சரை சந்தித்தார்

இலங்கை மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பல்தரப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை இரு தரப்பினரும் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

இருதரப்பு அரசியல் உறவுகள், நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு, இருதரப்பு வர்த்தக விரிவாக்கம், முதலீடு மற்றும் சுற்றுலா, கல்வி மற்றும் பிராந்திய மற்றும் பல்தரப்புத் துறைகளிலான பரஸ்பர ஆர்வம் சார்ந்த விடயங்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டன.




அதிகரித்த இணைப்பையும், வணிக மற்றும் சுற்றுலா உறவுகளையும் மேலும் பலப்படுத்த வல்ல வகையிலான கொழும்பு மற்றும் பரிஸுக்கு இடையேயான நேரடி விமான சேவை மீண்டும் தொடங்கப்படுகின்றமை வரவேற்கப்பட்டது.

காலைக்கதிர் Kalaikkathir

# மின் கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்படுமாம்!

## ஆரூடம் கூறுகிறார் சம்பிக்க எம்.பி



டிசெம்பர் மாதத்துக்குள் மசகு எண்ணெயை நாட்டுக்கு கொண்டு வராவிட்டால் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தையும், 200 மெகாவாட் தரத்துடன் இயங்கும் மின்நிலையங்களையும் மூட வேண்டிய நிலை ஏற்படும்.

உரிய காலத்தில் நிலக்கரி பெறாவிட்டால் நாட்டின் மின் கட்டமைப்பில் 40 சதவீத வீழ்ச்சி ஏற்படும். அவ்வாறு நிகழ்ந்தால் 12 மணித்தியால மின்துண்டிப்பை எதிர் கொள்ள நேரிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உலக சந்தையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் தேசிய மட்டத்தில் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலை அதிகரித்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகின்றமை மக்களை ஏமாற்றும் கருத்தாகக் கருத வேண்டும். அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களால் உணவுப்பொருள்களின் விலை நாளாந்தம் அதிகரித்துள்ளது.

எவ்விதமான தூரநோக்க சிந்தனையுமில்லாமல் கடந்த ஏப்ரல் மாதம் இரசாயன உரம் பாவனை மற்றும் இறக்குமதி தடை செய்யப்பட்டது. இரசாயன உரத்துக்குப் பதிலாக சேதனப் பசளை உரம் அறிமுகப்படுத்தப்பட்டது. சேதன பசளைத் திட்டம் கடந்த சிறுபோக விவசாயத்தில் தோல்வியடைந்தது.

உரப் பற்றாக்குறை காரணமாக பூ உற்பத்தி, மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்தி, சிறு ஏற்றுமதி பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்திகள் முழுமையாக வீழ்ச்சியடைந்தன. இதனால் சிறு ஏற்றுமதி உற்பத்தி ஊடாக அரசாங்கத்துக்குக் கிடைக்கும் 130 கோடி அமெரிக்க டொலர் இல்லாமல் போனது.

மறுபுறம் இரசாயன உரத்தை தடை செய்தமையால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 40 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

இதனால் இலங்கையின் 'சிலோன் டீ' என்ற வர்த்தக நாமம் சீனாவிற்கு செல்லும் நிலை ஏற்படும். மறுபுறம் கறுவாப் பட்டை உற்பத்திக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பெரும் போக விவசாய காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் உரப் பற்றாக்குறையை முன்னிலைப்படுத்தி வீதிக்கிறங்கி போராடுகிறார்கள். சிறுபோகத்தை போன்று பெருபோகமும் இம்முறை பயனற்றதாக அமையும். பெரும்போக விவசாயத்தின் ஊடாக மூன்றில் இரண்டு பங்கு நெல் விளைச்சல் கிடைக்கப் பெறும்.

இம்முறை பெரும்போகத்தில் சிறந்த நெல் விளைச்சலை எதிர்பார்க்க முடியாது. நெல் விளைச்சல் குறைவடைந்தால் அரிசி இறக்குமதி செய்ய நேரிடும். அரிசி இறக்குமதிக்கு அரசாங்கத்திடம் டொலர் கிடையாது.

அவ்வாறாயின் நாட்டில் உணவுப்பற்றாக்குறை ஏற்படும். கொவிட் பெருந்தொற்று தாக்கம் செலுத்தியுள்ள நிலையில் உலக நாடுகள் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ள நிலையில் அரசாங்கம் தேசிய உற்பத்திகளை சவாலுக்குட்படுத்தியுள்ளது. மறுபுறம் அரசாங்கம் எவ்வித வரையறைகளுமில்லாமல் நாணயம் அச்சிடுகிறது. 2019 ஆம் ஆண்டு 29 பில்லியன் ரூபா மாத்திரம் அச்சிடப்பட்டது. ஆனால் தற்போதைய அரசாங்கம் கடந்த இரண்டு வருட காலத்திற்குள் மாத்திரம் 1,300 பில்லியன் நிதி அச்சிட்டுள்ளது.

நாட்டின் உற்பத்திகள் குறைவடைந்துள்ள நிலையில் வரையறையில்லாமல் அச்சிட்டுள்ளதும் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பிற்குக் காரணிகளாக அமைகின்றன.

எரிபொருளை பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் மசகு எண்ணெயை தேவையான அளவு பெற்றுக் கொள்ளாவிட்டால் நுரைச்சோலை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தையும், 200 மெகாவாட் மின்னுற்பத்தி தரத்திலான மின்நிலையங்களையும் மூட வேண்டிய நிலை ஏற்படும். உரிய காலத்தில் நிலக்கரி பெறாவிட்டால் நாட்டின் மின்கட்டமைப்பில் 40 சதவீத வீழ்ச்சி ஏற்படும். அவ்வாறு நிகழ்ந்தால் 12 மணித்தியால மின்துண்டிப்பிற்கு மக்கள் முகம் கொடுக்க நேரிடும். – என்றார்.





# கண்டியின் புதிய ஆயர் பிரதமரைச் சந்தித்தார்

பரிசுத்த பாப்பரசரினால் அண்மையில் கண்டி மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தார்.

கண்டி மாவட்டத்தின் ஆயர் பதவிக்கு மேலதிகமாக சிலாபம் மறைமாவட்ட ஆயராகவும் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை பணியாற்றி வருகின்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகைக்கும் இடையே நட்பு ரீதியான கலந்துரையாடல் இடம்பெற்றது.

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி மீது தாக்குதல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் வைத்து திடீர் மரண விசாரனை அதிகாரி மீது மதுபோதையில் சென்ற குழுவினரால் கடந்த செவ்வாய் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த நிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

பரந்தன் – குமரபுரம் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவர் நோய் வாய்ப்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சமயம் உயிரிழந்துள்ளார்.

அந்த நபரின் சடலம் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு செவ்வாய் இரவு 7 மணியளவில் அதற்கான முடிவு வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் செவ்வாய் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்ற கிளிநொச்சி பரந்தன் பகுதியில் விருந்தினர் விடுதி ஒன்றை நடத்திவரும் விடுதி உரிமையாளர் உள்ளிட்ட 14 பேர் கொண்ட குழுவினர் மதுபோதையில் சென்று தொலைபேசியில் திடீர் மரண விசாரணை அதிகாரியை அழைத்து குறித்த சடலத்தை தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது குறித்த திடீர் மரண விசாரணை அதிகாரி மீது வைத்தியசாலை வளாகத்தில் வைத்து தாக்குதல் நடத்தியமையுடன், அவரது மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், காயமடைந்த திடீர் மரண விசாரணை அதிகாரி கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மது போதையில் சென்ற குழுவினர் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பல்வேறு பொது அமைப்புக்களும் தமது கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளோம் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டுக்கு அரிசி வழங்கும் விவசாயிகள் நடு வீதியில்!

## எதிரணி ஆர்ப்பாட்டம்



விவசாயிகள் எதிர்நோக்கும் உரப்பற்றாக்குறையை முன்னிறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தது.

குருநாகல் தேர்தல் தொகுதியின் வெல்லவ பிரதேசத்தில் விவசாயிகளும், எதிர்க்கட்சியினரும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

'நாட்டுக்கு அரிசி வழங்கும் விவசாயிகள் வீதியில்' எனும் கருப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அசோக அபேயசிங்க மற்றும் ஜே.சி.அலவதுவல ஆகியோரும் கலந்துகொண்டனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 168

**421.ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்தவற்றை மறந்து சர்வதேசத்தில் அவர்கள் தலைவர்களாக, வீரர்களாக பவணி வரவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதா?**

அதுவல்ல எதிர்பார்ப்பு. எரியும் நெருப்பிற்கு என்ன செய்வது என்ற சுயபுத்தி, அறிவு, படிப்பினைகள் என்பதில் பெறப்படும் அணுகுமுறை. அவற்றை ஒட்டிய பொது நோக்குகள். புலம்பெயரில் இந்தப் பட்டையைக் கிளப்பித் திருவிழா கொண்டாடி, ஊடகங்களில் செய்திகளாக்கி மனமாறலாம். இவை எங்களது வலிகளின் வெளிப்பாடுகள் எனப் புரிந்து கொள்ளலாம்.

புலத்தில் இருந்து இவர்களை (ராஜபக்ஷக்களைச்) சந்தித்து பேரம் பேச விரும்புவோர் இருக்கிறார்கள். நாட்டில் தமிழ்ப் பிரதேசங்களில் அவர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுத்து அடிவருடுகிறார்கள்.

ஆகவே, பார்வைகளின் யதார்த்தமென்ன, அவற்றினால் புலம்பெயர் நாடுகளிலே தமிழ் மக்களின் அவ




லங்களிலே கரிசனை கொண்டிருப்போருக்கு நாம் ஏற்படுத்தும் எண்ண அலைகள் என்ன, தாக்கங்கள் யாது என்பவற்றைப் பற்றிப் புரிந்து. செயல்படவேண்டும். பிரசாரத்தின் அளவுகோலுக்குள் அவை அமைதல் முக்கியம்.

ஏனெனில் எமது விருப்பு வெறுப்புக்களைத் தாண்டி, அதிகாரங்கள் அவர்களை மற்ற நாட்டினரால் வரவேற்க வைக்கின்றன. அவை ராஜதந்திரம். அந்த ராஜதந்திரங்களுக்கு முட்டுக்கட்டையாக முன்வைக்கப்படுபவை வன்முறைகளின் வெளிப்பாடுகளாகவோ அல்லது வன்முறையாளர்களின் தூண்டுதலால் ஏற்பட்டவையான அபிப்பிராயங்களாகவோ தோன்றுவது பிரயோசனமற்றது. இவற்றுக்கு எதிராக, வடக்கு – கிழக்கில் விரிக்கப்படும் செங்கம்பளங்களும் கணக்கெடுக்கப்படும்.

தமிழ் மக்கள் அனுபவிப்பது இனப்படுகொலை என முன்னெடுப்பதற்கு,ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பணிப்புரை மூலம்தானா முன்னேறவேண்டும்?

தற்சமயம் அமுலிலுள்ள ஐ.நாவின் பொறிமுறைகளில் அதுதான் வழி. அந்த வழியின் ஓர் அங்கத்தில், சர்வதேச மனித உரிமை மன்றின் முன் தமிழ் மக்கள் நிற்கின்றார்கள். ஸ்ரீலங்காவின் தந்திரங்களும் தமிழ் மக்களது அரசியல்களும் அதனை 12 வருடங்களுக்கு மேல் இழுத்தடித்துள்ளன.

அப்படியாயினும் அந்தத் திசையை நோக்கி நகர்கின்றது. இவற்றின் அழுத்தத்தால் அரசியல் தீர்வு என ஒன்று வெளிவருமா என்பது சர்வதேசத்தின் நகர்வுகளைப் பொறுத்தது.

பிரச்சாரங்கள், பொதுவாக இவற்றை சர்வதேசத்தின் பார்வையில் வைத்திருந்தாலும் கூட, மனித உரிமை மன்றின் முன்னே சட்டரீதியாக மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் நடந்தன என ஆதாரபூர்வமாக நிறு வப்படவேண்டும். அதை தவிர்த்து அல்லது புரிந்து கொள்ளாமல், வெளியேயிருந்து எமக்கு நீதி தரப்படவேண்டும் என போராடுவது பிரச்சாரத்தின் ஓர் அங்கமாகவே முடியும். லண்டனிலிருந்து, பாரிஸிலிருந்து சைக்கிள் பவனிகள் போவதும், காணாமல் போனவர்களின் உறவுகள் வீதியோரங்களில் நின்று போராடுவது எல்லாமே பிரச்சினைகளின் உணர்வுகளின் வெளிப்பாடுகளே ஒழிய மனித உரிமை மன்று அவற்றை ஆதாரமாகக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. தொடர்ந்த ஆதாரப்பட்ட சம்பவங்களின் சமர்ப்பணங்க ளின் அடிப்படையில் தான் இனப்படுகொலை என்ற வாதம் சட்ட அமைவுகளுக்கு அமைந்து முன்னேறிச் செல்லப்படவேண்டும்.

ஆகையால் தான் இதனை அரசியல்வாதிகளின் அரசியலிலிருந்து விலத்தி, தமிழ் மக்கள் அதனை சட்டத்தரணிகள், சட்டவாளர்கள், புத்திஜீவிகள் ஊடாக மேலெடுத்துச் செல்ல வேண்டும் என அபிப்பிராயம் தெரிவித்தேன். தமிழ் மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை தானா என்பதை தனிப்பட்ட முயற்சிகளில் சர்வதேச குழாம் ஒன்று ஆராய்ந்தது. அவை பற்றி பார்க்குமுன் சர்வதேச குற்றவியல் மன்றுக்கு ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் பிரேரணையின்றி சமர்ப்பணம் செய்யலாம் என எடுக்கப்படுகின்ற முயற்சியைப் பார்க்கலாம். அதுவும் இன்னொரு முன்னெடுப்பே.



டேவிட் மற்றாஸ்

**422.அந்த முயற்சி எத்தகையது?**

தமிழர் உரிமை குழு (Tamil Rights Group) என கனடாவிலிருந்து இயங்கும் புலம்பெயர் அமைப்பு, சர்வதேச குற்றவியல் மன்றுக்கு நேரடியாகப் போவதற்கு வழியுள்ளது என எல்லா தமிழ் அமைப்புக்களையும் ஆதரவு கேட்டு அதற்காக சில முயற்சிகளை மேற் கொள்கிறது. இதுவும் ஒருவழியான பிரச்சாரம் என இதை ஒதுக்கிவிடமுடியாது. ஏனெனில் அது சட்டம் சம்பந்தமானது. பல வியாக்கியானங்கள் கொடுக்கப்படலாம். ஆனால் யாதார்த்த ரீதியில் கிட்டக்கூடிய பயனைப் பொறுத்துத்தான் அது ஆக்கபூர்வமான பாதையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.





தமிழர் உரிமை குழு என்ற இந்த அமைப்பும் சில காலங்களுக்கு முன் தோன்றியதுதான். அதன் பெயரில் முன்னர் லண்டனிலிருந்து ஒன்று இயங்கியது. ஆனால் இது கனடாவில் பதியப்பட்டது. வெவ்வேறானவை. இது பற்றி அவர்கள் நடத்திய களனி ஆய்வில் நான் பங்குபற்றியிருந்தேன். அதன்பிரதம சட்ட ஆலோசகராக அதனை நெறிப்படுத்திய டேவிட் மற்றாஸ் (David Matas) முன்னர் நாடு கடந்த தமிழீழ அரசுக்கும் ஆலோசகராக இருந்தவர். அக்காலங்களில் தமிழ் அகதிகள் சர்வதேசங்களில் சஞ்சலப்பட்டு, தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு, அந்தரப்பட்ட வேளைகளில் அவரது புத்திமதிகளை நாடுகடந்த தமிழீழ அரசின் அமைச்சர்களூடாகப் பெற்றிருந்தேன். அன்றைய களனி ஆராய்விலும் அவர் கூறியவற்றையும் நினைவிற்கொள்ளவேண்டும்.

"இப்படியான நடவடிக்கைகளால், தமிழ் மக்களது நிலையை சர்வதேச சமூகத்தில் ஒரு விழிப்புணர்வு நிலையில் வைத்திருக்கலாம். அதுதான் இதில் வரக்கூடிய ஆதாயம்" என்பது அவரது கூற்று.

சுருக்கமான Proprio motu (இத்தாலிய மொழியில்) எனச் சொல்லப்படுவது ஒரு கோட்பாடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உண்டு.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதான சட்டத்தரணி (Chief Prosecutor) தானாக, தன்னிச்சையாக, குற்றவியல் நீதிமன்றத்தின் அங்கத்துவ நாடு ஒன்று




கேட்காமல் அல்லது ஐ.நாவின் பாதுகாப்புச் சபை பாரப்படுத்தப்படாமல் இனப்படுகொலை, மனித குலத்துக்கெதிரான குற்றங்கள் போன்றவையை விசாரிக்க முடியுமா என்ற அவரது அதிகாரங்களை ஒட்டியது. அவை சர்வதேச மன்று ஆரம்பிக்கப்பட்ட வேளையிலேயே விவாதிக்கப்பட்டு, அதன் அதிகாரங்கள் சரத்து 13 (c), 15, 53 (1) களில், ரோம் குற்றவியல் சட்டங்களில் அடக்கப்பட்டுள்ளன.

(வளரும்)

# ஜனாதிபதி பங்காளிக் கட்சிகளை புறக்கணிக்கிறார் வெட்கமின்றி அரசுக்குள் சுதந்திரக் கட்சி உள்ளது

## குமார வெல்கம எம்.பி. சாட்டை

பங்காளிக் கட்சிகளின் ஆதரவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். எனவே தான் ஜனாதிபதி பங்காளிக் கட்சிகளை புறக்கணிக்கிறார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் வெட்கமில்லாமல் அரசாங்கத்துடன் தொடர்ந்து ஒன்றிணைந்துள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கெரவலபிட்டிய விவகாரம் தொடர்பில் பேச்சில் ஈடுபட ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் 10 பிரதான பங்காளிக்கட்சி தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி புறக்கணித்துள்ளார். பங்காளிக் கட்சிகளை ஜனாதிபதி புறக்கணிப்பது இதுவொன்றும் புதிதல்ல.

பங்காளிக் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபடுகின்றமை பயனற்றது என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உள்ளார். பங்காளிக் கட்சிகளின் ஆதரவு இருந்தாலும், இல்லாவிட்டாலும், அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் ஜனாதிபதி, உட்பட அரசாங்கத்தின் முக்கிய தரப்பினர்கள் உள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். சுதந்திரக் கட்சியின் கொள்கையை அவமதிக்கும் வகையில் கருத்துரைக்கிறார்கள். வெட்கமில்லாமல் சுதந்திரக் கட்சியினர் தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள்.

பங்காளிக் கட்சியின் தலைவர்கள் அரசாங்கத்தில் மூன்றாம் தரப்பினரை போன்று செயற்படுகிறார்கள். தம்மைத் தெரிவுசெய்த மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியினராக செயற்பட வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு அரசாங்கத்தில் இருந்து ஒருபோதும் வெளியேறமாட்டார்கள். மக்களின் நிலைப்பாட்டைக் காட்டிலும் அவர்களுக்கு தங்களின் சுய தேவைகள் மாத்திரம் முக்கியமானவையாக உள்ளன.



அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். களுத்துறை மாவட்டத்தில் தேயிலை பயிர்ச்செய்கை பிரதானமாகக் காணப்படுகிறது. உரப் பிரச்சினையால் தேசிய பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது. ஆளும் தரப்பில் உள்ள களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பிரச்சினைகள் தொடர்பில் கருத்துரைக்காமல் உலக சந்தையின் விலையேற்றம் தொடர்பில் அரசாங்கத்துக்குச் சார்பாகக் கருத்துரைத்துக் கொள்கிறார்கள். – என்றார்.

# மீண்டும் நாட்டைக் கைப்பற்றுங்கள் மஹிந்தவிற்கு பகிரங்க அழைப்பு

## விடுத்தார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என தேசத்தின் பாதுகாப்புக்கான மக்கள் குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்ச நோக்குடன் நாடு மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்று நினைத்தாலும், 200 சதவீத மக்கள் தற்போது அரசாங்கத்தால் ஏமாற்றமடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகித்தாலும் நாட்டைக் கட்டியெழுப்ப அனுபவமிக்க மஹிந்த ராஜபக்ஷ அவசியம். மஹிந்த ராஜபக்ஷவால் மட்டுமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

இரசாயன உர இறக்குமதித் தடையால் நாட்டினுடைய விவசாய நடவடிக்கைகள் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தான்தோன்றித்தனமான முடிவே இதற்குக் காரணம்.

மஹிந்த ராஜபக்ஷவை நம்பியே 69 லட்சம் மக்கள் வாக்களித்தனர். நாட்டைப் பாதுகாக்க நினைத்தால் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அரசாங்கத்துக்கு எதிராக நாலா பக்கங்களிலும் இருந்து எதிர்ப்புகள் வலுப் பெறுவதற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தைப் பெற வேண்டும். நான் கட்டிய வீட்டில் உள்ள குறைபாடுகளை உடனடியாகச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டு வருவதில் முன்னின்று செயற்பட்டவர்களுள் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றார்.

எனினும் கடந்த சில காலங்களாக அரசாங்கத்துக்கு எதிராக கடும் விமர்சனங்களை இவர் முன்வைத்து வருகின்றமையுடன் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டி வருகின்றார். மேலும், தற்போதைய சூழலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் இந்த அரசின் எதிர்காலத்துக்கு அது பாதிப்பாக அமையும் எனவும் அவர் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விரைவில் புதிய அரசமைப்புக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு



புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நோக்கமும், அரசாங்கத்தின் நோக்கமும் தெளிவாக உள்ளது.

எனினும் கொவிட் வைரஸ் தொற்றுப்பரவல் சவால்களுக்கு மத்தியில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் துரிதப்படுத்த முடியாது போயுள்ளது என ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை விடவும் கொவிட் சவால்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதே சவாலாக அமைந்ததாகவும் அவர் கூறுகின்றார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள், புதிய அரசமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தும், நாட்டுக்கு மிகச் சரியான, அதேபோல் நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு, சகல மக்களும் சம உரிமையுடன் ஒற்றுமையாக வாழக் கூடிய சட்டங்களை இயற்றி புதிய அரசமைப்பை கொண்டுவருவதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதில் எவரும் அச்சமோ சந்தேகமோ கொள்ளத்தேவையில்லை. ஜனநாயக ரீதியில் இந்த நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம். – என்றார்.

# குற்றவியல் நடைமுறைக்கோவைத் திருத்தங்களால் ராஜபக்ஷக்களுக்கு எதிரானவர்கள் இலக்காகலாம்!

## எச்சரிக்கின்றரார் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

குற்றவியல் நடைமுறைக்கோவைத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில், எதிர்வருங்காலங்களில் அதனால் யார் வேண்டுமானாலும் பாதிப்படையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

குறிப்பாக ராஜபக்ஷக்களுக்கு எதிராக செயற்படக் கூடியவர்களை இலக்குவைத்து எவ்வித இன, மத, மொழி பேதங்களுமின்றி அதனைப் பயன்படுத்தும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள குற்றவியல் நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலொன்று அரசாங்கத்தால் கடந்த 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட நிலையில், அது மனித உரிமைகளில் மிகமோசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று சிவில் சமூக மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதன் பாரதூரத் தன்மை தொடர்பாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர்காணலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

கேள்வி:- குற்றவியல் நடைமுறைக்கோவையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டிருப்பது என்ன? அது 'மிகப்பாரதூரமானது' என்று விவரிக்கப்படுவதற்கான காரணமென்ன?

பதில்:- ஒருவர் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் 48 மணிநேரம் வரையில் அவரை நீதிவான் நீதிமன்றத்திலோ அல்லது மேல்நீதிமன்றத்திலோ ஆஜர்படுத்தாமல் இருப்பதற்கான வாய்ப்பை இந்தத் திருத்தம் வழங்குகின்றது. எனவே இலங்கைப் பொலிஸாரின் கடந்தகால செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், கைதுசெய்யப்பட்ட நபர் இந்தக் காலப்பகுதியில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. எனவே இந்தத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படக்கூடாது என்றே எதிர்பார்க்கின்றோம்.

கேள்வி:- குற்றவியல் நடைமுறைக்கோவையில் தற்போது திருத்தங்கள் கொண்டுவரப்படுவதற்கான காரணம் என்ன?

பதில் :- தற்போதைய சூழ்நிலையில் அவர்கள் எதற்காக இந்தத் திருத்தங்களைக் கொண்டுவருகின்றார்கள் என்பதே மிகமுக்கியமான கேள்வியாகும். இந்தத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் தற்போதைய அடக்குமுறைகள் மேலும் தீவிரமடையக்கூடும். பொலிஸாரால் கைதுசெய்யப்படும் ஒருவர் நீதிவான் நீதிமன்றத்திலோ அல்லது மேல்நீதிமன்றத்திலோ ஆஜர்படுத்தப்படாமல் தடுத்துவைக்கப்படுவதென்பது அச்சுறுத்தல்களுக்கு வழிவகுக்கும் அதேவேளை, அது முற்றிலும் தன்னிச்சையான தடுத்துவைப்பாகவே அமையும்.

கேள்வி:- எனவே மேற்படி திருத்தங்கள் மிகமோசமானவை என்பதைத்தாண்டி, எமது நாடு எத்தகைய ஜனநாயகத்தைப் பின்பற்றுவதற்கு முயற்சிக்கின்றது? நாம் சீனாவைப் பின்பற்றுவதற்கு முயற்சிக்கின்றோமா?

பதில்:- ஜனாதிபதி சீனாவின் சிறப்பம்சங்கள் தொடர்பாகப் பேசுவதைப் பார்த்திருக்கின்றோம். எனவே அவர் சீனாவின் கொள்கைகளில் சிலவற்றைப் பின்பற்றக் கூடும். ஆனால் அது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். தெற்காசியாவின் மிகவும் பழைமையான ஜனநாயக நாட்டில், அதன் பாரம்பரியம் வலுவிழந்து வருகின்றமை விசனத்துக்குரியதாகும். ஆகவே, மேற்குறிப்பிட்டவாறான யோசனைகளின் தீவிரத்தன்மை தொடர்பாக நாட்டு மக்கள் அனைவரும் நன்கு புரிந்துகொள்வது அவசியமாகும். ஏனெனில் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் எதிர்வருங்காலங்களில் அதனால் யார்வேண்டுமானாலும் பாதிப்படையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. குறிப்பாக அது ராஜபக்ஷக்களுக்கு எதிராக செயற்படக் கூடியவர்களை இலக்குவைத்து எவ்வித இன, மத, மொழி பேதங்களுமின்றிப் பயன்படுத்தப்படக் கூடிய சாத்தியப்பாடு காணப்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

# இராணுவம் கைப்பற்றிய நிலங்களை மீளப்பெற கூட்டு சமஷ்டி அவசியம்!

## வடக்குக் கிழக்கில் படையினர் வெளியேறினால் அரச கட்சிகளின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்

### நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. செவ்வி



படையினர் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பதால் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன. இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம். ஒற்றையாட்சியின் கீழ் 'இராணுவமே வெளியேறு' என்றால் அடுத்த நிமிடமே எம்மைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்து விடுவார்கள்.

இன்று மத்திய அரசாங்கக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலம் வருபவர்கள் படையினர் இங்கு வேரூன்றி நிற்கின்றார்கள் என்ற ஒரே ஒரு பலத்தின் நிமித்தமாகவே அவ்வாறு வலம் வருகின்றார்கள். அரச பலம் என்பது இவர்களுக்கு இங்கு முகாமிட்டிருக்கும் படையினர் மூலமே கிடைக்கின்றது. படையினர் வடக்கு, கிழக்கில் இருந்து வெளியேறி விட்டால் அரச கட்சிகளின் பிரதிநிதிகளின் இருப்பு கேள்விக்கிடமாகிவிடும்.

– இவ்வாறு தனது வாராந்த செவ்வியில் தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அவரது வாரந்தக் கேள்வி – பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கேள்வி:– ஒற்றையாட்சியைத் தமிழ்க் கட்சிகள் விரும்பாததேன்?

பதில்:– ஒற்றையாட்சித் தலைமைத்துவம் பெரும்பான்மையினக் கட்சிகள் வசம் இருக்கும் போது சிறுபான்மையினர் பாகுபாட்டுக்கு உள்ளாவார்கள் என்பதால்.

கேள்வி:– பெரும்பான்மையினக் கட்சிகளில் சிறுபான்மையினர் போதிய அளவு இடம் வகித்தால் இந்த நிலைமை எழாதல்லவா?

பதில்:– எழும். இலங்கை போன்ற நாடுகளில் எழும். இலங்கையில் பெரும்பான்மையினத் தலைவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உட்பட்டுள்ளார்கள். தமது இனம் இலங்கை நாட்டில் பெரும்பான்மை என்றாலும் பக்கத்தில் – தமிழ் நாட்டில் – பல கோடி தமிழர்கள் வாழ்ந்து வருகின்றமையால் தமக்கு எக் காலத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தில் இலங்கை வாழ் சிறுபான்மையினரைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றார்கள். தமது தாழ்வு மனப்பான்மையின் நிமித்தம் அவர்களை எழ விடாமல் தடுக்க வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள். அதனால் தம்முடன் சேரும் சிறுபான்மை இன மக்களையும் அவர்களே வழி நடத்துகின்றார்கள். சிறுபான்மை உறுப்பினர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றார்கள். இதற்கு நல்ல உதாரணம் இதுவரை காலமும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து பயணித்த தமிழ்த் தலைவர்களே.

பாகுபாட்டுக்குட்படும் சிறுபான்மையினரை அவர்களால் சட்ட ரீதியாகக் காப்பாற்ற முடியாது போய்விட்டது. தனிப்பட்டவர்களை அவர்கள் காப்பாற்ற முடியும். ஆனால் இனங்களின் உரித்துக்களைப் பெற்றுத் தர முடியாது. எனவே ஒற்றையாட்சியில் பெரும்பான்மையினரின் சிந்தனைகளே மேலோங்கி நிற்பன.

ஆனால் சிந்திக்கும் திறன் கொண்ட – பாகுபாட்டு சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காத – மனித உரிமைகள் மீது பற்றுக் கொண்ட – நியாய சிந்தனை பெற்ற பெரும்பான்மைத் தலைவர்கள் ஒரு நாட்டில் இருந்தால் அவர்கள் தாமாகவே சிறுபான்மை இன மக்களைக் காப்பாற்றும் வகையில் – அவர்களின் உரித்துக்களைப் பாதுகாக்கும் வகையில் – சட்டம் இயற்றுவார்கள். அதாவது அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு சிறுபான்மையினர் பெருவாரியாக வாழும் இடங்களில் அவர்கள் தங்களைத் தாங்களே ஆள வழிவகுப்பார்கள். ஆனால் பொதுவாக இன்றைய சிங்கள மக்கட் தலைவர்கள் இன ரீதியான சிந்தனைகளிலேயே ஊறியிருக்கின்றனர். அதற்கு முக்கிய காரணம் சிங்களவர் பற்றிய உண்மை வரலாற்றை அவர்கள் உணராதமையாலேயே. தமிழ் மக்களின் தொன்மை பற்றி அவர்கள் அறியாதமையாலேயே. ஆகவே, அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்படுகின்ற ஒற்றையாட்சி தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காது. ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக நிலங்கள் பறிபோகின்றன. தற்போது அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கேள்வி:– அதனால்த்தான் சமஷ்டி அரசைத் தமிழ்க் கட்சிகள் கோருகின்றனவா…?

பதில்:– நிச்சயமாக! அதிகாரப் பகிர்வுக்கு செயல்வடிவம் கொடுப்பது சமஷ்டி அரச முறையே.

கேள்வி:– ஆனால் உங்கள் கட்சி கூட்டு சமஷ்டியை கோரியுள்ளதே?

பதில்:– ஆம்! கூட்டு சமஷ்டி முறை கூடிய அதிகாரங்களை அலகுகளுக்கு அல்லது பிராந்தியங்களுக்கு வழங்கும். அதாவது கூட்டு சமஷ்டி என்பது தனித்துவமான நாடுகள் பலவற்றை நிரந்தரமாக சில காரணங்கள் கருதி ஐக்கியப்படுத்துவதேயாகும். தமிழ் பேசும் பிரதேசங்கள் 1833 வரை தனித்துவ ஆட்சிகளாகவே இருந்து வந்தன.

சமஷ்டி முறையில் மத்திய அரசின் உள்ளீடு வெகுவாக இருக்கும். ஆனால் கூட்டு சமஷ்டியில் தனி அலகுகள் தம்மைத்தாமே ஆண்டுகொண்டு ஒரு சில காரணங்களுக்காக மட்டுமே மத்தியுடன் ஒத்துழைக்கும் விதத்தில் அமைவன. சமஷ்டி, கூட்டு சமஷ்டி இடையேயான வேற்றுமைகளைக் கோடிட்டுக் காட்டுவது சிரமம்.

ஆனால் பொதுவாக மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தப்பட்ட குறைந்த அதிகாரங்களையே கூட்டு சமஷ்டியில் பெற்றிருக்கும். நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கைகள் மேலும் சில சில்லறை அதிகாரங்கள் போன்றவை மத்தியிடம் இருப்பன. ஒரு விசேட அம்சமாகக் குறிப்பிடுவதென்றால் மத்திய அரசாங்கத்துக்கு கூட்டு சமஷ்டியின் கீழ் நேரடியாக இறைவரியை தனிக் குடிமக்களிடம் இருந்து பெற முடியாது. பதிலாக அவற்றைப் பிராந்திய அரசுகள் மூலமாகவே பெற வேண்டியிருக்கும். நாட்டின் தனி மனிதர்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கு இருக்காது. தற்போது ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறி போகின்றன. காணிகள் பறி போகின்றன. மக்கள் வறுமையின் விளிம்பில் நின்று தத்தளிக்கின்றார்கள். ஆனால் தாம் செய்த தவறுகளுக்காக இறைவரிகள் மூலமாக எம்மை வருத்தி வருகின்றனர். கூட்டு சமஷ்டி முறை இவை யாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வரும்.

கேள்வி:– அப்படியானால் மத்திய இராணுவத்தை பிராந்தியங்களில் இருந்து வெளியேற்றலாமா?

பதில்:– கட்டாயமாக! வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால் தான் தமிழர் தாயகம் உய்யும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை போரின் பின் நிர்வகித்து வருகின்றது. உள்நாட்டுப் பிராந்திய பாதுகாப்பு கூட்டு சமஷ்டியில் பிராந்தியங்களுக்கே வழங்கப்படும். நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் காலம் வரும். பொலிஸ் உருத்துக்கள், காணி உருத்துக்கள், பிராந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அனைத்தும் பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்படும்.

இன்று படையினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் தொடர்ந்து இருப்பதால் பல பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

எமது வாழ்வாதாரம் தடைப்படுகின்றது. எமது நிலங்களை இராணுவம் பயன்படுத்தி இலாபம் பெறுகின்றார்கள்.

எமது சுதந்திரம் தடைப்படுகின்றது. மக்கள் இராணுவ முகாம் இட்டிருக்கும் இடங்களினூடாகப் பயணிக்க அஞ்சுகின்றார்கள். சுற்று வட்டார பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அச்சத்தில் வாழ்கின்றார்கள்.

தமிழர் தாயக நிலங்கள் பறிபோவதற்குப் படையினரே உறுதுணையாக நிற்கின்றார்கள். பல்லாயிரம் ஏக்கர் நிலங்களைச் சுவீகரித்து உள்ளார்கள்.

திணைக்களங்களுடன் படையினர் சேர்ந்து பிறழ்வான வரலாற்றுக் காரணங்களை முன் வைத்து நிலங்களைக் கையேற்கின்றார்கள்.

புத்த பிக்குகளுடன் படையினர் சேர்ந்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர்.

பௌத்த வணக்க ஸ்தலங்களை பௌத்தர்கள் அல்லாத இடங்களில் நிர்மாணிக்கப் படையினர் உதவி புரிந்து வருகின்றனர்.

படையினர் வடமாகாண மக்களின் நடமாட்டங்கள், எவர் எவருடன் அவர்கள் உள்ளூரில் தொடர்பு வைத்துள்ளார்கள் மற்றும் அவர்களுக்கு யார் யாருடன் வெளிநாட்டிலும் தொடர்பு இருக்கின்றது என்பவை சம்பந்தமான முழு விவரங்களையும் சேகரிக்கின்றார்கள்.

இவை உத்தியோகபூர்வ காரணங்களுக்கே என்று நாம் நினைக்கக் கூடும். ஆனால் பணம் பறித்தல், கடத்தல் போன்ற பல காரியங்களுக்கும் இவ்வாறான தரவுகள் பாவிக்கப்படுகின்றன.

இங்குள்ளவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ளும் போது அவர்கள் புலிகள் இயக்கத்துடன் முன்னர் தொடர்புடையவர்கள் என்று கண்டால் உடனே இங்குள்ளவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய படையினர் உதவுகின்றார்கள்.

உள்ளூர் மக்கள் பலரின் வறுமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சில நன்மைகளைச் செய்து அவர்களைத் தமது கையாள்களாகத் தமிழ் மக்களுக்கு எதிராக மாற்றுகின்றார்கள். இன்று மத்திய அரசாங்கக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலம் வருபவர்கள் படையினர் இங்கு வேரூன்றி நிற்கின்றார்கள் என்ற ஒரே ஒரு பலத்தின் நிமித்தமாகவே அவ்வாறு வலம் வருகின்றார்கள். அரச பலம் என்பது இவர்களுக்கு இங்கு முகாம் இட்டிருக்கும் படையினர் மூலமே கிடைக்கின்றது. படையினர் வடக்கு, கிழக்கில் இருந்து வெளியேறி விட்டால் அரச கட்சிகளின் பிரதிநிதிகளின் இருப்பு கேள்விக்கிடமாகிவிடும்.

அது மட்டுமல்ல. தெற்கிலிருந்து இழுவைப்படகுகள் இங்கு வந்து எமது கடல் வளங்களைச் சூறையாடுவது நின்று விடும். திணைக்களங்கள் எமது மக்களின் தாயக நிலங்களைக் கையேற்பது நின்று விடும். புத்த பிக்குகள் பௌத்த வணக்கஸ்தலங்களை எதேச்சாதிகாரமாக வடக்கு கிழக்கில் நிறுவுவது நின்று விடும். வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நின்று விடும். இதுவரையில் கைப்பற்றப்பட்ட நிலங்களை திரும்பப் பெற கூட்டு சமஷ்டி முறை வழி வகுக்கும்.

படையினர் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருப்பதால் இன்னும் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன. இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம். ஒற்றையாட்சியின் கீழ் 'இராணுவமே வெளியேறு' என்றால் அடுத்த நிமிடமே எம்மைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்து விடுவார்கள்.– என்று தெரிவித்தார்.

# மீள் அறிவிப்பு வரும்வரை ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஒக். 22

நேற்று முதல் மீண்டும் தொடங்கவிருந்த ரயில் சேவைகள் மறு அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளன என, ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

ஒக்ரோபர் 19 ஆம் திகதி ரயில்வே துறை வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து சேவைகள் ரத்து செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டது.

ரயில்கள் இயங்குவதற்கான கால அட்டவணை வெளியிடப்பட்டாலும், மறு அறிவிப்பு வரும் வரை சேவை நிறுத்தப்படும் என்று கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ரயில் சேவைகளை நிறுத்துவதற்கான முடிவின் காரணத்தை சங்கம் ஆராயும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை நீடிக்குமாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதனையடுத்து 31 ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான தடை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# புராண படன மரபுகளும் சிறப்பும்

யாழ்ப்பாணத்தில் புராண படன மரபு சிறப்பிற்குரியது. குறிப்பாக கந்த புராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர் புராணம், ஏகாதசிப்புராணம், திருவிளையாடற்புராணம், சிவராத்திரி புராணம், பிள்ளையார் புராணம், மயூரகிரிப்புராணம், தணிகைப் புராணம் முதலிய பல புராணங்கள் இங்கு படனம் செய்யப்படுகின்றன. அவற்றில் கந்தபுராண படனம் யாழ்ப்பாணத்திற்கே தனித்துவமான சிறப்பிற்குரியது. நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற பல முருகன் ஆலயங்களில் கந்த புராணம் படித்து நிறைவு செய்த பின் கொடியேற்றி பெருவிழாவை ஆரம்பிக்கும் மரபு இன்று வரை பேணப்பட்டு வருகிறது.

எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள கற்றவர்களும் மற்றவர்களும் கந்தபுராணத்தை அருணூல் வரிசையில் வைத்து ஒரு திருமுறையாகவே போற்றிப் பேணி வருகிறார்கள். கந்தபுராணத்தைத் திருமுறை வரிசையிலும் கச்சியப்பப் பெருமானைக் குரவர்கள் வரிசையிலும் வைத்துப் போற்றுவது ஆன்றோராசாரம். – இப்படிச் சொல்கிறார் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள்.

கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த கந்த புராணம் முருக பக்தர்களால் பெரிதும் போற்றப்படும் – பக்தி சுவை ததும்பும் – மந்திரப் பொக்கிஷமாகும்.

சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விருத்தப்பாக்களால் அமைந்த இந்நூலை இலங்கை சைவ தமிழர்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து வருகின்றனர். ஊர்கள் தோறும் சிற்றாலயங்கள் முதல் பேராலயங்கள் வரை அடியவர்கள் கூடியிருந்து பக்தி சிரத்தையுடன் இப்புராணத்தை படனம் செய்வர். ஆலயங்களில் மட்டுமன்றி, வீடுகளிலும், தொழிலகங்களிலும் கூட கந்தபுராண படனம் நடைபெற்று வந்துள்ளது. சுமார் இரண்டு முதல் மூன்று மாத காலம் வரை இப்படனம் நடைபெறும். ஒருவர் பாடல்களை இசையுடன் படிக்க இன்னொருவர் உரை செய்வார். இந்த மரபில் மிக நீண்ட நேரம் நிகழும்.

இப்புராண படனத்தை கல்வியறிவு உள்ளோர், கல்வியறிவு குறைந்தோர் என்று எல்லோரும் பக்தி சிரத்தையுடன் கேட்பார்கள்.

கச்சியப்ப சிவாச்சாரியார் வாழ்ந்த காலத்திலேயே இம்மரபு இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி விட்டதாகச் சொல்வார்கள்.

குறித்த நூல் அரங்கேற்றத்திற்குச் சென்ற கச்சி கணேசையர் என்பவர் யாழ்ப்பாணத்தில் இம்மரபை அறிமுகம் செய்தார் என்பர். தொலைக்காட்சி முதலிய நவீன வசதிகள் இல்லாத அக்காலத்தில் புராண படனமே மக்களின் அறிவெழுச் சிக்கும் பக்தி வளர்ச்சிக்கும் ஒழுக்கமான வாழ்வியலுக்கும். பொழுதுபோக்குக்கும் அடிப்படையாக இருந்தது.

குறித்த புராண படனம் நடைபெறும் மாதங்களில் புலால் உண்பவர்கள் கூட அவற்றை விடுத்து பக்தி சிரத்தையுடன் புராண படனத்தில் ஈடுபடுவார்கள்.

இந்த புராண படனத்தில் பின்பற்றப்படும் மரபுகள் ஆச்சரியம் தருவன. ஆயினும் இவை சரியான முறையில் பதிவானவையாகத் தெரியவில்லை.

புராண படனம் செய்பவர்கள் குறித்த இரண்டு/ மூன்று மாதங்கள் முகச்சவரம் செய்ய மாட்டார்கள். புலால், மது உண்ண மாட்டார்கள். நியமத்தோடு இருப்பார்கள்.

அதை விட சிறப்பு புராண படனம் நடக்கும் இடத்தில் இருவர் நியமக்காரர் என (ஒருவர் பாட்டு படிக்க, மற்றவர் பயன் சொல்ல) நியமிக்கப்படுவர். இவர்கள் அந்த அறுபது, எழுபது நாள்கள் தினமும் புராண படன நிகழ்வில் கலந்து கொள்வர்.

பாடல் படிப்பவர் பொதுவாக வடக்கு நோக்கியும் பயன் சொல்பவர் கிழக்கு நோக்கியும் இருப்பர்.

பயன் சொல்லல் / உரை சொல்லல் என்றால் பொருள் சொல்லல், விருத்தி உரை சொல்லல், விளக்கம் சொல்லல், செம்பொருள் சொல்லல் என கொள்ளலாம்.

உதாரணமாக ‘மூவிரு முகங்கள் போற்றி’ என்று தொடங்கும் பாடல் பாட்டு வாசிப்பவரால் முழுமையாக முதலில் இசையோடு வாசிக்கப்படும் பிறகு ஒவ்வொரு வரியாக அதே இசையோடு சொல்லப்படும்( மூவிரு முகங்கள் போற்றி) உரை சொல்பவர் அவ்வரிக்கு அதே இசையில் பொருள் சொல்வார்.

இன்ன இன்னதற்கு இந்த இந்த ராகம்/பண் என்றும் ஒரு வழக்கம் இருந்ததாம். இப்பொழுது இந்த பொது மரபுகளே இல்லாமற் போகும் நிலையில், இம்மரபுகள் (இசை) பற்றி அறிந்தோரை அடையாளம் காண கடினமாகியுள்ளது.



புராண படனம் ஆரம்பிக்கும் நாளிலும் நிறைவிலும் காப்பவிட்டல், காப்பிடல் என்று திகட சக்கர, உச்சியின் மகுடம், மூவிரு முகங்கள் என்ற மூன்று காப்புச் செய்யுள்களையும் மாறி மாறி ஒன்று முன் ஒன்று பின், பிறகு ஒன்று முன், ஒன்று பின்னாக பல முறை படனம் செய்வர்.

ஆலயக் குருக்கள் காப்பு செய்யுளை படித்து புராண படனத்தை ஆரம்பித்து வைப்பார். அது போல நிறைவும் செய்வார்.

குறித்த நியம காரரின் சேவைக்காக இக்காலத்தில் நடக்கும் வழிபாடுகளில் அவர்களுக்கு முதல் பிரசாதம், காளாஞ்சி வழங்கப்படும்.

குறித்த காலத்தில் புராண படனத்தை ஒட்டி விசேட கும்பம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கும். அதில் அமிர்தேஸ்வரரான சந்த்ரன் ஆவாகனம் செய்யப்பட்டு முளைப்பாலிகை இடும் மரபும் உண்டு.

மேலும், நியம காரர்கள் வாசித்த பிறகே ஏனையவர்கள் படிப்பார்கள். உரை சொல்வார்கள்.

விசேடமான படிப்புகளுக்கு (சுவாமி கல்யாணம், திருவவதாரம், சூரன் போர், வள்ளி கல்யாணம் முதலியன) தனித்தனி உபயதாரர்கள் இருப்பர். அவர்கள் அந்நாள்களில் விசேட வழிபாடுகள், அன்னதானம் ஒழுங்கு செய்வர். விசேடமான படிப்புகளில் சிறப்பான ஒரு பாடல் நைவேத்தியப்பாட்டு என அழைக்கப்படும். அப்பாடல் படிக்கப்பட்டதும் சுவாமிக்கு நெய்வேதனத்தோடு தீபாராதனை நடக்கும். ஏற்கனவே படனம் செய்பவரிடம் புதியவர் புத்தகம் பெறும் போது அவரது வலப்பக்கத்தில் நின்றே புத்தகம் பெறுவர்.

ஒரு படலம் படிக்கப்பட்டதும் மறு படல முதற்பாடல் படிக்கப்பெற்று படனம் நிறைவு செய்யப்படும்.

முக்கியமான தெய்வானையம்மன், வள்ளியம்மன் கல்யாணப்படிப்புகளின் போது கன்னிக்கால் நாட்டி, சுற்றிலும் நான்கு கும்பங்கள், நான்கு குத்துவிளக்குகள் வைக்கப்பட்டு மங்கல அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

புராண படன நிறைவில், நியம காரரின் சிரசில் புராணப்புத்தகம் சர்வமங்கல கோஷத்தோடு திருவுலாக்காணும். அந்நாளில் அன்னதானம் வழங்கப் படுவதோடு சுவாமி திருவூஞ்சல் உற்சவம் கண்டு வீதியுலாச் செய்யும் மரபும் உண்டு.

ஆனால் நவீன வாழ்வியல் இப்புராண படன மரபை பெரிதும் சிதைத்து விட்டது. இப்பொழுதெல்லாம் புராண படனம் சடங்காகவே சில இடங்களில் நடைபெறுகிறது.

கேட்பார் இல்லாமல் படிப்போர் மட்டுமே படிக்கின்றனர். பல இடங்களில் அம்மரபும் நின்று போய் பல காலமாகி விட்டது. சில இடங்களில் கந்த சஷ்டி காலத்தில் மட்டும் சூரன் போர் படலம் படிக்கப்படுகிறது. எனவே, இம்மரபை மீளெழுச்சி செய்ய வேண்டியது அவசியம்.

குறித்த எழுத்துக்கள் முருகப் பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டன என்பதும், திருத்தம் செய்து கொடுக்கப்பட்டன என்பதும். அரங்கேறும் போது நேரே புலவர் வடிவில் எழுந்தருளி அங்கீகரிக்கப்பட்டன என்பதும் நம்பிக்கையாகும். இம்மரபுகளில் பலவும் கந்தபுராணத்திற்கு மட்டுமன்றி ஏனைய பல புராணங்களுக்கும் பேணப்பட்டு வந்தன.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் மட்டக்களப்பிலும் பரவலாகவும் திருச்செந்தூர் புராணம் தனிச்சிறப்புடன் படனம் செய்யப்படுகிறது. மாவிட்டபுரத்திலும் கந்தசஷ்டி காலத்தில் இப்புராணம் பக்தியுடன் படிக்கப்படுகிறது.

வென்றிமாலைக்கவிராயர் எழுதிய இப்புராண ஏடு கடலில் மிதந்து வந்து மட்டக்களப்பில் கரையொதுங்கியதாகவும், அப்புராண ஏடு வைக்கப்பட்ட இடம் பெரியதொரு இடரில் இருந்து தப்பியதாகவும் மரபு வழிக் கதைகள் உண்டு.

அவ்வகையில் இப்புராணத்தை கிழக்கிலங்கையில் சிரத்தையுடன் படனம் செய்யக் காணலாம்.

தவிர, திருவெம்பாவைக்காலத்தில் பெரும்பான்மை ஆலயங்களில் கடவுள்மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணம் படனம் செய்யப்படுகிறது.

வரத பண்டிதர் எழுதிய ஏகாதசிப்புராணம் ஏட்டிலேயே இன்னும் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் வைகுண்ட ஏகாதசி, மற்றும் பீம ஏகாதசி நாள்களில் படனம் செய்வதைக் காண முடிகிறது.

- தியாக. மயூரகிரிக்குருக்கள் -
(ஆசிரியர் – ‘இந்துசாதனம்’)

கந்தபுராண படனத்தில் சிவயோக மாமுனிவரும் பெரிதும் ஈடுபட்டிருந்தார் என்பர். தொல்லைகள் அகல கந்த புராணம் படி என்று அவர் அறிவுறுத்தினார் என்பர்.

பௌராணிகர்களாகிய நவாலி நல்லையா, புற்றளை பிரம்மசாரி சுப்பப்பா, வல்வெட்டித்துறை கட்டி அண்ணர், தெல்லிப்பளைக் குகஸர்மா, நீர்வேலி இராஜேந்திரக் குருக்கள், துன்னாலைச் சங்கரப்பிள்ளை, மந்துவில் சின்னத்தம்பி , பறாளாய் யோகி கார்த்திகேசு, வரணி மணிஜயர், ஏழாலைச் சச்சிதானந்தசிவம், மாவிட்டபுரம் சங்கரப்பிள்ளை, ஆவரங்கால் பண்டிதர் சுப்பிரமணியம், ஏழாலை சண்முகவடிவேல், கந்தர்மடம் ஆறுமுகம், பொன்னாலைப் பொன்னம்பலவாணர், மீசாலை விநாசித்தம்பி போன்ற பலர் கந்தபுராண பயன் சொல்வதில் அண்மைக்காலத்தில் வன்மை பெற்று விளங்கினர்.

ஆக, இந்த புராண மரபுகள் இலங்கையின் தனித்துவ பண்பாட்டுக் கோலமாதலில், நல்ல வகையில் ஆவணப்படுத்த வேண்டும். ஆவணப்படம் மூலமும் பதிவு செய்யப்பட வேண்டும். இத்துறை வல்லுனர்கள் இது பற்றி சிந்திப்பார்களாக.

இப்புராண படன மரபுகள் பற்றி இணைய வழி கட்டுரைகள், YouTube பதிவுகள் செய்யப்பட வேண்டும். அதன் வழியும் ஆவணமாக்கல் செய்யப்பட வேண்டும்.

இம்மரபில் தேர்ச்சி பெற்ற தலைமுறை தற்போது பெருமளவில் இல்லை. ஆனால், ஆங்காங்கே மருத்துவம்,பொறியியல்கற்றஇளைஞர்கள்கூடஆர்வத்தோடும் பக்தியோடும் ஈடுபட்டு வருவது நம்பிக்கை அளிக்கிறது.

கந்தசஷ்டி விழா அண்மிக்கிற இக்காலத்தில் கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் ஆகியவற்றை சிந்திப்பதும் அவற்றின் குறித்த பகுதிகளையேனும் படனம் செய்ய முற்படுவதும் இறைவன் முருகன் திருவருளை நமக்குச் சேர்ப்பிக்கும்.

பாரத தேசத்தின் பல பாகங்களிலும் கண்ணன் கதை பேசும் பாகவத வடமொழி சுலோகங்களை ஏழு நாள்கள் படனம் செய்யும் மரபு உண்டு. அது பாகவத சப்தாஹம் என்று அழைக்கப்படுகிறது.

அது போலவே, தேவி மஹாத்மியம் என்ற அம்பாளின் சரிதத்தை படனம் செய்யும் முறையும் உள்ளது. அதை நவ தினங்களில் படனம் செய்யும் முறை உண்டு. பல தடவை படனம் செய்து ஹோமமும் உண்டு. அதனையே சண்டீ ஹோமம் என்பர்.

இவை போலவே வட மொழி ஸ்காந்த புராணத்திலிருந்து தொகுக்கப்பட்ட எழுநூறு வடமொழி சுலோகங்களை உடைய ஸ்கந்தசப்தசதியை பாராயணம் செய்யும் வழக்கமும் சிலரிடம் உள்ளது.

ஆனால், இவை வடமொழியில் உள்ளவை. ஆனால், நம் தமிழிலேயே இந்த புராண படனம் என்ற அழகிய மரபு நம் மண்ணில் வேரூன்றி வளர்ந்திருக்கிறது. அதனை காலத்திற்கேற்ப சில மாறுதல்களோடேனும் பேணிப் பாதுகாப்பது வைதிக சைவர்களான நம் கடனாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கணேசன் குத்துக் கரணம் அடித்தமை மனோவைப் பெரிதும் பாதித்தது.

அண்ணன் – தம்பி உறவு கூட முரண்பட்டு போனது. மாறி மாறி மோசமான விமர்சனங்கள் கூடப் பீறிட்டன. முரண்பாடு முற்றி உறவு குலைந்தது.

2015 தேர்தலில் பிரபா கணேசன் நேரடியாகப் போட்டியிடா விட்டாலும் அவரினால் அதற்குப் பின்னர் அரசியலில் பெரிதாக மேலெழும்ப முடியவில்லை. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் என்ற ஒரு கட்சியை அவர் உருவாக்கினார். எனினும், எதுவும் காத்திரமாகச் சாதிக்க முடியவில்லை.

ஆனால் மனோவோ, 2015, 2020 ஆகிய இரு தேர்தல்களிலும் மீண்டும் கொழும்பில் வெற்றிபெற்றார். நல்லாட்சி அரசியல் முக்கிய அமைச்சராக இருந்து செல்வாக்குச் செலுத்தினார்.

இந்தப் பின்புலத்தில்தான் தண்ணீரை விட இரத்தம் கெட்டியானது என்ற உண்மை உறுதியாகும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

கருத்து வேறுபாடுகளை மறந்து அண்ணனும் தம்பியும் இணைந்து செயற்பட இணங்கியிருக்கின்றார்கள். தம்பியாரை அவரது அலுவலகத்துக்கு இரண்டு தடவைகள் தேடிச் சென்று சந்தித்திருக்கின்றார் அண்ணன் மனோ கணேசன் என்றும், கருத்து வேறுபாடுகளைத் துறந்து ஒன்றுபட்டு செயற்படுவதற்கான பாதை குறித்து இருவரும் தமக்குள் உரையாடியிருக்கின்றனர் என்றுன் தெரிகின்றது.

ஊடகங்கள் குழப்பாமல் விட்டால் உறவு மீண்டும் இறுகும் என்கின்றது நெருங்கிய வட்டாரம் ஒன்று.

இருவரும் பிரிந்து நின்றால், அடுத்த மட்ட அரசியல் தலைமை தங்களுக்குத்தான் என்று இரு தரப்பிலும் நம்பிக் கொண்டு – ஒட்டிக் கொண்டு – இருந்த சில பிரகிருதிகளுக்குத்தான் இந்த மீள் இணைவு வேம்பாய்க் கசக்கும் என்று நினைக்கிறேன்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

– மின்னல் –

---

## இந்திய மீனவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்தபோதும் 20ஆம் திகதியே இந்திய மீனவனின் உடலம் மீட்கப்பட்டு விட்டது. தமிழகத்தில் செய்தி பரவியது. இதனால் தமிழக மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

20ஆம் திகதி நண்பகல், காணாமல் போன இந்திய மீனவர் இலங்கை கடற்படையினரால் உயிரற்ற உடலமாக மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை தளத்துக்கு அது கொண்டு வரப்பட்டது.

அதன்போது காங்கேசன்துறைக்குச் சென்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டமையோடு பிரேத பரிசோதனைக்காக உடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதன் பிரகாரம் 20ஆம் திகதி மாலை காங்கேசன்துறைமுகத்தில் இருந்து போதனா வைத்தியசாலைக்குச் சடலம் எடுத்துச் செல்லப்பட்டது. முன்னிரவு பிரேத பரிசோதனையும் இடம்பெற்றது. நீரில் மூழ்கியதால் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் அதன் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பித்து உடலம் தமிழகம் அனுப்பும் பணி இடம்பெற வேண்டியபோதும் அது தாமதம் அடைகின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் தாமதம் ஏற்பட தமிழக மீனவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளமையே காரணம் எனத் தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தமிழக மீனவர்களின் கோரிக்கையாக 18ஆம் திகதி மூழ்கிய படகில் பயணித்த ஏனைய இரு மீனவர்களையும் இலங்கை கடற்படையினரிடமிருந்து அழைத்து வந்தால் மட்டுமே உண்மையைக் கண்டறிய முடியும் எனவும், அதனால் அவர்களையும் அழைத்து வந்தாலே உயிரிழந்த மீனவரின் உடலைப் பொறுப்பேற்போம் என உறுதியாக கூறுகின்றனர் அவர்கள்.

இதன்காரணமாக தற்போது இராஜதந்திர மட்டத்தில் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இரு மீனவர்களையும் விடுவித்து உயிரிழந்த மீனவனின் சடலத்துடன் தமிழகத்துக்கு அனுப்புவதற்கான பணிகள் இடம்பெறுகின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் உயிரிழந்த மீனவரின் உடலம் இன்றும் தமிழகம் செல்ல வாய்ப்பில்லை என்பதோடு இவை அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு நாளை இரு மீனவர்களுடன் உயிரிழந்த மீனவரின் உடலம் கடல் வழியாக தமிழகம் எடுத்துச் செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது

---

## தொற்று 554...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 2 ஆயிரத்து 464 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 08 பெண்களும், 11 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 562 ஆக அதிகரித்துள்ளது.

---

## ஜனநாயகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் –

நாட்டில் தற்போது அமுலிலுள்ள குற்றவியல் நடைமுறை தொடர்பான வழிகாட்டல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று கடந்த 08.10.2021 அன்று அரசால் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதன் பிரகாரம், ஒருவர் கைது செய்யப்பட்டால் நாற்பத்தெட்டு மணிநேரம் வரையில் அவரை நீதிவான் நீதிமன்றத்திலோ அல்லது மேல்நீதிமன்றத்திலோ ஆஜர் படுத்தாமல் இருப்பதற்கு இந்தத் திருத்தம் வழிவகை செய்கின்றது.

இலங்கையில் ஏற்கனவே மனித உரிமைகளுக்கு விரோதமான பல சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. இதில் முக்கியமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் அது. 1978ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, இன்றுவரை 43 வருடங்களாக அமுலில் இருக்கின்றது. ஏற்கனவே, இது இலங்கை மக்களுக்கான அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் மறுத்து, பதினெட்டு மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகிறது.

இந்தச் சட்டமூலம் அகற்றப்பட வேண்டும் அல்லது திருதப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை வற்புறுத்தியபோதிலும்கூட இன்னமும் அவை அகற்றப்படாமலே இருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க, இலங்கையின் ஜனாதிபதி அவர்கள் பதவி ஏற்றவுடன், இராணுவத்திலிருந்த பல்வேறுபட்ட உத்தியோகத்தர்களை பொறுப்பு வாய்ந்த சிவில் நிர்வாகங்களுக்கு அமர்த்தியுள்ளார். இது எதிர்காலத்தில் இந்த நாடு ஒரு இராணுவ ஆட்சிக்கு உட்படுமாக இருந்தால், சிவில் நிர்வாகத்தை இலகுவாக தம் வசம் வைத்திருப்பதற்கான ஒரு ஏற்பாடாகவே எல்லோராலும் கருதப்படுகின்றது. குறிப்பாக நாடு இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில், விவசாயம், மீன்பிடித் தொழிலாளர்கள் மாத்திரமல்லாமல், அரச உத்தியோகத்தர்கள் உட்பட குறைந்தபட்ச வாழ்வாதாரங்களுக்காக போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தநிலையில்தான், குற்றவியல் நடைமுறை கோவை திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்தத் திருத்தங்களும் நாட்டின் குடிமக்களுக்கான ஜனநாயக உரிமைகளை மறுதலிக்கின்றமையுடன், கைது செய்யப்பட்டால் அவர் உடன் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை உரிமையையும் மறுதலிக்கின்றது. ஏற்கனவே இலங்கை பொலிஸார் உச்சபட்ச அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமை மாத்திரமல்லாமல் பெருமளவில் இலஞ்ச ஊழல்வாதிகளாகவும் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், ஒரு சந்தேக நபரை நாற்பத்தெட்டு மணிநேரம் காவலில் வைத்திருப்பது என்பது அவரை சித்திரவதை செய்யவும் தமது விருப்பத்திற்கேற்ற வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளவும் இந்த கால அவகாசங்கள் உதவும் என்றே நாம் நம்புகின்றோம்.

பொலிஸார் தமது தேவை கருதியோ அல்லது வேறு சில அரசியல்வாதியின் தேவை கருதியோ அல்லது தனிப்பட்ட முறையில் தமது நண்பர்களுக்கு உதவும் வகையிலோ இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட இது வழிவகை செய்கிறது. எனவே, இந்தக் குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தங்கள் என்பது ஒட்டு மொத்தமான இலங்கை மக்களுக்கும் பாதகமாகவே அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவற்றுக்கு அப்பால் அரசுக்கு எதிராகக் குரல்கொடுக்கக்கூடிய சிறிய, பெரிய அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கும் அவர்களது குரல்வளையை நசுக்குவதற்கும் ஜனநாயக முற்போக்கு, சிவில் அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்களது ஜனநாயக செயற்பாடுகளை முடக்குவதற்கும் கூட இந்தத் திருத்தங்கள் பாவிக்கப்படலாம்.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் கொண்டுவரப்பட்ட 20ஆவது திருத்தச் சட்டமும் சரி, குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தச் சட்டமூலமானாலும் சரி, சிவில் நிர்வாகத்துக்கு இராணுவத்தினரை நியமித்தமையும் சரி, அனைத்து விடயங்களுமே சட்டரீதியாக எதேச்சாதிகாரத்தை நோக்கி இந்த நாட்டைக் கொண்டு செல்வதற்கே வழிவகுத்து வருகின்றது.

அரசு தனக்கு அதிகப் பெரும்பான்மை இருக்கிறதென்ற அடிப்படையில் இது சட்டமாக்கப்படலாம். ஆனால், எதிர்க்கட்சிகள் அனைத்தும் இவை சட்டமாவதன் ஊடாக நாட்டு மக்களுக்கு பாரியதோர் அச்சுறுத்தலாக அமையும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## யாழ்., கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இக்காலகட்டத்தில் நான் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினேன். அப்போது என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் கூட இந்தப் பட்டியலில் உள்ளனர். அவர்கள் அப்போது 6ஆம். 7ஆம் தரங்களில் கல்வி கற்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனும் 6ஆம் தரத்தில் படித்து, இவர்களுடன் இராணுவத்தில் சரணடைந்து கொல்லப்பட்டவர்களில் ஒருவராகவுள்ளார்.

இவ்வாறு உயிருடன் இராணுவத்தில் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? இவ்வளவு காலமும் இதற்கான நீதி இந்த மண்ணிலே கிடைக்கவில்லை.

ஒவ்வொரு தடவையும் ஜெனிவாவில் பிரேரணை வருகின்ற வேளையில், ஜெனிவாவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்ற வேளையில் மட்டுமே இந்த விடயங்கள் பேசு பொருளாகின்றன.

குடும்பம் குடும்பமாக இவர்கள் சரணடைந்தனர். அதற்கான சாட்சிகள், ஆதாரங்கள் உள்ளன. ஆனால், இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

நாட்டில் சட்டங்கள் குறித்து பேசுகின்றோம். நீதிப் பொறிமுறை பற்றி பேசுகின்றோம். சிறுவர்களின் உரிமைகள் குறித்து பேசுகின்றோம். ஆனால், இன்றும் 17 பெண்கள் குழந்தைகளுடன் சிறைகளில் உள்ளனர். அவர்களின் பிள்ளைகளைக் கூடப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உயரிய சபையில் நியாயம், சட்டம் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், கைது செய்யப்பட்ட நபர்களைச் சென்று பார்க்க முடியாத நிலைதான் உள்ளது.

திருகோணமலையில் சிறுவன் ஒருவன் தன்னுடைய முகநூலில் பதிவிட்ட புகைப்படம் காரணமாக அவன் கைதுசெய்யப்பட்டு இன்றும் சிறையில் உள்ளான். இவ்வாறு பல குடும்பங்கள் கண்ணீருடன் உள்ளனர்.

இந்தக் கொரோனா காலத்தில் கடந்த மூன்று மாதங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 39 பேர் இரவிரவாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு மற்றும் கிளிநொச்சியில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் தமது பிள்ளைகளுக்காக, உறவினர்களுக்காக, மாவீரர்களுக்காகத் தமது எண்ணங்களை கண்ணீரை கற்பூரமாகவோ மெழுகுவர்த்தியாகவோ ஏற்றி வணங்க முடியாத நிலையில் இந்த நாட்டின் சட்டம் செயற்படுகின்றது.

தமிழர்கள் இந்த நாட்டில் எந்த நிலைமையில் உள்ளனர் என்பதை சர்வதேசம் விளங்கிக்கொள்ள வேண்டும். உயிரோடு ஒப்படைக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகளுக்கு நீதி கிடைக்குமா? – என்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் முழு பெயர் விபரங்களையும் சிறிதரன் எம்.பி. சபையில் ஆவணப்படுத்தினார்.

---

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டோரின் 34ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினரால் வைத்தியசாலையில் கடமையில் இருந்த 21 பேர் சுட்டு படுகொலை செய்யப்பட்டிருந்ததன் 34ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இடம்பெற்றது

இந்திய இராணுவத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக உயிரிழந்தோரின் உறவுகளால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது

சுகாதார நடைமுறைகளைப் பேணி மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

5 ரூபாவாலும், டீசல் ஒரு லீற்றர் 5 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு லீற்றர் 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 162 ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசலின் விலை 116 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒக்ரைன் 95 பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என லங்கா ஐ.ஓ.சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை எனவும், போதியளவு கையிருப்பு பேணப்படுகின்றது எனவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

---

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கேதீஸ்வரதாசன் நேற்றுக் காலமானார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமாகி வீடு திரும்பிய நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை திடீரெனச் சுகவீனமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தநிலையில், நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

# லொஹான் மீது குற்ற நடவடிக்கை கைதிகளுக்கு பாதுகாப்பான சிறை

## உயர்நீதிமன்று நேற்று அதிரடி உத்தரவு

## அடிப்படை உரிமை மீறல் மனுவும் ஏற்பு

(ந.லோகதயாளன்)



**அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை அவர்கள் தமக்குப் பாதுகாப்பானது எனக் கருதும் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று கட்டளை வழங்கியுள்ளது. அத்தோடு அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச் சாட்டுகள் தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைகளை உரிய முறையில் எடுத்து, சட்ட மா அதிபரின் உரிய கலந்தாலோசனையுடன், அவ்விடயங்களின் விவரங்களை உயர்நீதிமன்றத்துக்கும் தெரியப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.**

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுள்ளமையுடன் மேற்படி இடைக்காலக் கட்டளைகளையும் பிறப்பித்தது.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அப்போதைய சிறைச்சாலை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழங்காலில் மண்டியிடச் செய்து, தலையில் கைத்துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் காமினி அமரசேகர, யஸந்த கோட்டா கொட, ஜனக் டி சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் மனுதாரர்களின் திருத்தப்பட்ட சத்தியப் பிரமாணப் பத்திரங்களின் அடிப்படையில் அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராகச் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் அரசமைப்பின் 11ஆவது பிரிவின் கீழ் முன் வைக்கப்படுகின்றமையால் அவர்கள் இருவர் சார்பிலும் சட்ட மா அதிபரின் பிரதிநிதிகள் எவரும் மன்றில் முன்னிலையாக மாட்டார்கள் என சட்ட மா அதிபர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மனுவைப் பரிசீலித்த நீதியரசர்கள், அரசமைப்பின் 11 ஆம் பிரிவின் கீழான சித்திரவதைக்கு எதிரான சுதந்திரம், 12(1) ஆம் பிரிவின் கீழான சமத்துவமாக நடத்தப்படுவதற்கான உரிமை மற்றும் 12(2) ஆம் பிரிவின் கீழான இன, மத, மொழி, சாதி, பாலினம், அரசியல் நிலைப்பாடு, பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படாமல் இருப்பதற்கான உரிமை ஆகிய பிரிவுகளின் கீழ் மனுவை விசாரணைக்கு ஏற்கின்றனர் என அறிவித்தனர்.


மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளின் கோரிக்கைகளை விரிவாக ஆராய்ந்த நீதியரசர்கள், அநுராதபுரம் சிறைச்சாலை யில் உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கிய தடுப்புக் காவல் கைதிகளை அவர்கள் விரும்பினால், விரும்பிக் கோரும் சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் அல்லது அநுராதபுரத்தில் இருக்க சம்மதம் தெரிவித்தால் அங்கே இருக்க முடியும் எனவும் பணித்தனர்.

இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் குற்றவியல் நடவடிக்கைகளை ஆரம்பித்து, விரிவான அறிக்கை பெற்று மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், த.ஜெயசிங்கம் ஆகியோர் முன்னிலையாகினர்.

சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலி ஸிட்டர் ஜெனரல் ரஜீவ குணதிலக முன்னிலையானார்.

# நாடாளுமன்றத்தில் கோட்டா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று முற்பகல், நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதியை, சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், நாலக்க கொடஹேவா, காஞ்சன விஜேசேகர, அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இசுரு தொடங்கொட ஆகியோர் வரவேற்றனர். அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்தார்.

ஜனாதிபதி சபைக்குள் பிரவேசிக்கும் போது, நிலையியல் கட்டளை 27/2இன் கீழ், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

எதிர்க்கட்சித் தலைவரின் வாய்மூல கேள்விகளுக்கு, அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண ஆகியோர் அளித்த பதில்களை, ஜனாதிபதி செவிமடுத்துக்கொண்டிருந்தார்.

## சீனியின் விலை மீண்டும் உயர்வு

நாட்டின் பல பகுதிகளில் சீனியின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது என வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அரசு சீனிக்கு கட்டுப்பாட்டு விலை விதித்துள்ளபோதிலும் சந்தையில் அது கடைப்பிடிக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சில பகுதிகளில் சீனித் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அரசின் தலையீட்டுடன் சீனி விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

## அரிசியின் விலையும் மீண்டும் அதிகரிப்பு

கீரிசம்பா அரிசி ஒரு கிலோவை 30 ரூபாவாலும், நாட்டரிசியை 15 ரூபாவாலும் அதிகரிக்க பொலன்னறுவை பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த விலை அதிகரிப்புக்கேற்ப கீரி சம்பா ஒரு கிலோ 195 ரூபாவாகவும், சம்பா அரிசி ஒரு கிலோ 155 ரூபாவாகவும், நாட்டரிசி ஒரு கிலோ 130 ரூபாவாகவும் சந்தையில் விற்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் வெள்ளைப் பச்சை அரிசி ஒரு கிலோ 120 ரூபாவாகவும், சிவப்புப் பச்சை அரிசி ஒரு கிலோ 105 ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொலன்னறுவையில் இருந்து சந்தைக்கு அரிசி விநி யோகிப்பதில் பின்னடைவு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மின்னல் தாக்கி சிறுமி மரணம்!

மின்னல் தாக்கி 12 வயது சிறுமி ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் மாவட்டம், மஹுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பன்வெள, பலல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியே உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் சீரற்ற காலநிலை நிலவி வந்த நிலையில், சிறுமி தனது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த போது மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார்.

எரிகாயங்களுடன் நாகொல்லாகம வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது சிறுமி உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக நாகொல்லாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622